# இனப்பிரச்னைக்கான பொறுப்பை ஜே. ஆர். ஏற்க வேண்டும்

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 8 இதழ் 157
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24 — 07 — 1993

**- சிறிமா பேட்டி**

(கொழும்பு)
தமிழர் பிரச்னையை தீர்க்கும் விடயத்தில் சிங்கள அரசியல் வாதிகள் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்வுகளில் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை.

எதிர்க்கட்சித் தலைவியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு நேற்று பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து பி.பி.ஸி

(4ம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் இந்துக்கள் ஊர்வலம்

(கொழும்பு)
வெள்ளவத்தையிலிருந்து இருளப்பனை வரை இந்துக்கள் மத ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தினர்.

1983 ஜூலை இனக்கலவரம் ஏற்பட்டு நேற்று பத்து ஆண்டுகள் பூர்த்தியானதை ஒட்டி இந்த மத ஊர்வலம் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஊர்வலத்தில் சுமார் 1500 தமிழ் பெண்கள் வரை கலந்து கொண்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

### புலிகள் தாக்கலாம் என்ற அச்சத்தினால்

# ஜனாதிபதி பிரதமர் மட்டு விஜயம் இறுதி நேரத்தில் ரத்தானது!

## நடமாடும் இடம் பெயர் சேவை பிசுபிசுப்பு!!

(கொழும்பு)
மட்டக்களப்பில் நேற்று ஆரம்பமான நடமாடும் ஜனாதிபதி இடம் பெயர் சேவையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும், பிரதமர் ரனில் விக்கிரமசிங்காவும் கலந்து கொள்ள வில்லை. இறுதி நேரத்தில் இவர்கள் இருவரது மட்டக்களப்பு விஜயம் திடீரென ரத்து செய்யப்பட்டது. விடுதலைப்புலிகள் மட்டக்களப்பு பகுதியில் தாக்குதல் ஒன்றை நடத்தலாம் என பாதுகாப்பு படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் காரணமாக இவர்கள் இருவரது விஜயமும் ரத்துச்செய்யப்பட்டதா தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் நடமாடும் ஜனாதிபதி இடம்பெயர் சேவை நேற்று ஆரம்பமானது.

ஜனாதிபதியும், பிரதமரும் இதில் முக்கியமாகக் கலந்து கொண்டு மக்கள் பிரச்சினைகளைத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பர் என்று முன் கூட்டியே அறிவிக்கப்பட்டு அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இடம்பெயர்சேவை ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே மட்டக்களப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டன. ஆயிரக்கணக்கில் ராணுவம், பொலிசார் குவிக்கப்பட்டனர்.

சோதனை என்ற பெயரில் மக்கள் பலவித அசௌகரியங்களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளானார்கள். பலர் கைதானார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி இல்லாது இயங்கிய செயலகம்

(கொழும்பு)
மட்டக்களப்பில் ஜனாதிபதியின் நடமாடும் செயலகம் என அழைக்கப்படும் குழு ஜனாதிபதியின்றி தனியே இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மக்கள் தொடர்பு என்ற ரீதியில் பார்த்தால் இந்த முயற்சி படுதோல்வி

(4-ம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியின் பாதுகாப்பிற்கு படையினரின் உத்தரவாதமில்லை

(கொழும்பு)
சிறிலங்கா ஜனாதிபதியைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்புப் படையினர் உத்தரவாதமளிக்க முடியாத ஒரு நிலையிலே தற்போது உள்ளனர் என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி விஜயதுங்காவின் மட்டக்களப்பு விஜயம் திடீரென இரத்துச் செய்யப்பட்டது இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

கடந்த காலமாதங்களாக மட்டக்களப்பில் சுமுக நிலை ஏற்படுத்தி அங்கு ஜனாதிபதியும், பிரதமரும் பாதுகாப்புடன் விஜயம்செய்ய இரு

(4ம் பக்கம் பார்க்க)

### காணாமல் போனோரின் உறவினர் படையெடுப்பு

(மட்டுநகர்)
மட்டக்களப்பில் நடமாடும் ஜனாதிபதி செயலகம் நடத்தப்படும் கட்டிடத்துக்கு வெளியே நீண்டு காணப்படும் கியூ பாதுகாப்பு அமைச்சகத்திற்கு முன்னால் காணப்படுகிறது.

நூற்றுக்கணக்கான மக்கள் காணாமல் போன உறவினர்களின் கதி என்ன என்பதை அறிவதற்காக பாதுகாப்பு அமைச்சகத்திற்கு வெளியே

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவம் சீற்றம்

(கொழும்பு)
ஜனாதிபதியின் மட்டுநகர் விஜயம் ரத்துச் செய்யப்பட்டது குறித்து இராணுவ தலைமை அதிகாரிகள் சீற்றமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆயுதம் தாங்கிய பொலிசாரும் இராணுவமும் மட்டுநகரில் நிலை கொண்டிருக்கிறார்கள்.

ஹெலிகொப்டர்கள் வான்

(4ம் பக்கம் பார்க்க)

### விடுதலைப்புலிகளுக்கு ஒரு அதிரடி வெற்றி

(கொழும்பு)
ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயம் இரத்துச் செய்யப்பட்டது விடுதலைப்புலிகளுக்கு ஒரு பிரச்சார அதிரடி வெற்றி எனக் கருதப்படுகிறது.

ஜனாதிபதியும், பிரதமரும் மட்டக்களப்பு விஜயத்தை மேற்கொள்ளக்கூடாது என ஜனாதிபதியின் பாதுகாப்புக் குழு ஆலோசனை வழங்கியது.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் ஆலோசனைக் குழுவின் யோசனையை அடுத்து ஜனாதிபதியும், பிரதமரும் தமது மட்டுநகர் விஜயத்தை ரத்துச்செய்தனர். (ரி)

### 10 ஆண்டு காலப்போரில் எழுபதினாயிரம் தமிழர் பலி

(லண்டன்)
இலங்கையில் கடந்த 10 ஆண்டு காலமாக இடம் பெற்றுவரும் இனப்போரில் இதுவரையும் 70,000 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பி. பி. ஸி. தனது செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

### படகு மூழ்கடிக்கப்பட்டதில் ஒருவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)
கிளாலியிலிருந்து ஆலங்கேணி நோக்கி புறப்பட்ட படகு ஒன்று நடுக்கடலில் வைத்து கடற்படையினரால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டுள்ளதில் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

கடந்த வாரம் இப்படகில்

(4-ம் பக்கம் பார்க்க)

### நல்லூர் ஆலய உற்சவ வீதித்தடை ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாவதை முன்னிட்டு கீழ்க்காணும் வீதிகள் பின்வரும் சந்திகளில் தடைசெய்யப்பட்டிருக்கும்.

இத்தடை இன்று 24ந் திகதியில் இருந்து அடுத்த மாதம் 18ம் திகதி வரை தினமும் காலை 5 மணியிலிருந்து இரவு 10-00 மணி வரை நடைமுறையில் இருக்கும். என்று தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர். இத்தடை இடங்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அடையாள அட்டை நாடு முழுவதும் விநியோகம்

(கொழும்பு)
மோசடி செய்ய முடியாத பாதுகாப்பு அடையாள அட்டைகளை நாடு முழுவதும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளைப் பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்ளவிருக்கிறது.

இந்த அடையாள அட்டைகளைத் துரிதமாக வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்படி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

புதிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் திட்டத்தின் கீழ் ஆட்களைப் பதிவு செய்யும் வேலைகள் கம்ப்யூட்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆண்டு -4

ஆண்டு 4ற்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஏற்ப அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும் வகுப்பு ஆரம்பம் 30-07-93 மாதாந்தம் இரண்டு பயிற்சிப் பரீட்சை நடைபெறும். அடுத்த பயிற்சிப் பரீட்சை 07-08-93 சனி மு.ப. 8-00-மு. ப. 11-00 மணிக்கு நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இ-338)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசுரலையல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(இ-310)

— பெயர் மாற்றம —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் *G.V. Kanesalinkam* என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
*G.V. Kanesalinkam,*
298, காங்கேசன்துறைவீதி,
— யாழ்ப்பாணம். —

(இ 330)

### இன்று திருவூஞ்சல்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவிலில் தேவி மகோற்சவவிழா தொடரில் இன்று 24ம் திகதி சனிக்கிழமை திருவூஞ்சல் இடம் பெறவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு விசேட மங்கள இசையுடன் ஊஞ்சல் பாட்டை எஸ். வீணை ரசமேஸ்வரன் பாட இருக்கிறார். (ம)

### வாங்குகள் அன்பளிப்பு

(ஆனைப்பந்தி)

தீவக மக்கள் தங்கியுள்ள முகாம்களில் மரணச்சடங்கு நடைபெறும் சந்தர்ப்பங்களில் சடலங்களை வைப்பதற்குப் பயன்படுத்தவென தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியம் வாங்குகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. மேற்படி ஒன்றியத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒவ்வொரு முகாம்களுக்கும் இவ்வாறு வாங்குகள் அன்பளிப்பாக வழங்கப்படுகின்றன.

(101)

### இடுகாடு புனரமைப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து இடுகாடு பரிபாலன சபையினதும் யாழ். மாநகரசபையினதும் கொழும்புத்துறை மக்களினது நிதியுதவியினால் புனரமைக்கப்பட்டு வருகிறது மாதம் இறுதியில் பரிபாலன சபையின் திரிஉருபற்றியால் இவ்விடுகாட்டில் உள்ள மடத்தில் அந்திரேட்டிக்கிரியைகள் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகப் பரிபாலனசபைத்தலைவர் திரு. க. மார்க்கண்டு தெரிவித்துள்ளார். -154

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு
வியாபாரிகளுக்கு விசேட சலுகை!
எமது தயாரிப்பான
★ கச்சான் அல்வா
★ எள்ளு அல்வா
★ மில்க் ரொபி
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
நியூ சந்திரா தொழிலகம்
209/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (எ 3274)

நல்லூர் முருகன்
கொடியேற்ற விழா இன்று!
விழாக் காலங்களில்
★ சுவையான
★ சுத்தமான
சிற்றுண்டி வகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
யாழ். றியோன்ஸ்
சுவீற் அன் கிறீம் கவுஸ்
352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(எ-3273)

## இராசி பலன்

24-07-1993
சனிக்கிழமை
(தமிழுக்கு ஆடி 09)

பஞ்சமி காலை 6-43 வரை, உத்தரம் காலை 11-34 வரை, இராகுகாலம் காலை 9-02 முதல் 10-32 வரை, சுப நேரம் மாலை 3-02 முதல் 4-32 வரை, ஷஷ்டி விரதம்.

மேஷம்: நண்பர் விவகாரம் தொழில் சிறப்பு, குடும்ப மகிழ்ச்சி.

இடபம்: நம்பிக்கை குறைவு பணமுடை, பயண அலைச்சல்.

மிதுனம்: அதிக செலவு, கண் உடைப்பு, தொழில் நஷ்டம்.

கடகம்: காரியசித்தி, விருந்தினர் வருகை, வாக்குவன்மை.

சிங்கம்: பழைய கடன் தொல்லை, உடல் உபாதை, மனச்சுமை.

கன்னி: கடமை உணர்வு, பெண் உதவி, வருவாய் அதிகரிப்பு.

துலாம்: மனக் குழப்பம், உறவினர் பகை, காரிய தாமதம்.

விருச்சிகம்: தாழ்ந்த நிலை, தாயார் உபதேசம், தெய்வ சிந்தனை.

தனுசு: வெட்டிப் பேச்சு, புத்திரர் செலவு, பதட்டம்.

மகரம்: குடும்ப வேற்றுமை அகால உணவு, தொழில் துன்பம்.

கும்பம்: அதிகாரிகள் சினம் சுருத்துமோதல், வீட்டில் துயர்.

மீனம்: பதவி மேன்மை, விருந்து வைபவம், எதிர் பாராத உதவி.

ஜோஸ்யர்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நீராவியடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நாயன்மார் திருமுறை மன்றத்தினரால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை நடாத்தப்படவுள்ளது.

இம்மாதம் 26ம் திகதி திங்கட்கிழமை காலை 9-30மணிக்கு ஆரம்பமாக உள்ள குருபூசைக்கு திருமதி தவமணி நடராசா தலைமை வகிக்கின்றார். "தோழமை" என்ற தலைப்பில் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையை சேர்ந்த திருமதி நாச்சியார் செல்வநாயகத்தின் சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (ம)

இன்று கொடியேறும் நல்லூர் முருகனை
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம் !
★ கலர், வெள்ளை படங்கள்
★ றபர் சீல்கள்
தயாரிப்பதற்கு யாழ்ப்பாணத்தில்
சிறந்த இடம்
தூரன் ஸ்ருடியோ
189, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
(ஏ-3375)

சுன்னாகம் பலநோ. கூ. சங்கம் (வ-து)
சுன்னாகம்.

தமிழ் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடம்

மேல் குறிப்பிட்ட பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி: தமிழ் தட்டெழுத்தாளர்
குறி. இல. 305: 13

சம்பளத் திட்டம்: 730/- 1055
..................
20X10; 25X5
இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

தகைமை: க. பொ. த. (சாதாரண தரத்தில்) சம்பந்தப்பட்ட மொழியினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களிலான சித்தியும், தமிழ் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 20 சொற்களுக்கு குறையாமலும்.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 09-08-93.

ரூ. 10/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தையும், மேலதிக விபரங்களையும் வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
21-07-93. (எ 3270)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி




எஸ். சரவணமுத்து (B. A. London)
தோற்றம்: 19-04-1901
மறைவு: 24-07-1983

எஸ். கலாபரமேஸ்வரன் (M. A- Ceylon)
தோற்றம்: 02-08-1944
மறைவு: 24-07-1983

திதி: 02-08-1993

கண்ணீர் துளியை மலர்களாயெடுத்து
காலமெல்லாம் நினைந்தே வணங்குவோம்!
பத்தாண்டு பறந்தும் பாசமோ விட்டிலோம்.
என்நாளும் உம் நினைவில் நனைந்தே
எண்ணச் சுடரை ஏற்றுவோம் வாழி!

தங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மனைவி, மக்கள், தந்தை, சகோதரர்கள், மைத்துனர், மைத்துனியர்.

'இலக்சுமி பதி'
பலாலி வீதி, திருநெல்வேலி
(இ-351)

**மணிவாசகர்**

''சுவர்க்கம், நரகம் என்பதுபற்றி எதுவும் திடமாக என்னால் கூற முடியாது. இவ்விரண்டு இடங்களிலும் எனக்கு நண்பர் உண்டு.''

- மார்க்டுவெய்ன்

# நமது நோக்கு

## காவிரி நீரா? காதிலே பூ...

காவிரி நீர்ப் பிரச்சினையைவிட்டு உண்ணாவிரதமிருந்த முதலமைச்சர் ஜெயலலிதா, அதனை வெற்றிகரமாகக் கைவிட்டார்

கர்நாடகம், காவிரிக்கு அணைபோட்டு நீரைத் தேக்கியதால், தமிழக விவசாயிகளுக்கு நீர்ப்பற்றாக்குறை

நியாயப்படி உரிய பங்கு நீரைத் திறந்து தருக என்பது தமிழ்நாட்டுக் கோரிக்கை

பேச்சுவார்த்தைகள், வாக்குறுதிகள், மத்திய அரசு ஆலோசனைகள் - இப்படிப் பல நடந்தும் தீர்வு இழுபறிதான்!

நடுவர்மன்றம் அமைக்கப்பட்டு, இடைக்காலத் தீர்வாகக் குறிப்பிட்ட அளவு நீரை வழங்கும்படி உத்தரவு வழங்கப்பட்டது.

ஆனால், கர்நாடக அரசு அசையவில்லை; அங்கும் மத்தியிலும் இந்திரா காங்கிரஸ் ஆட்சியே நடைபெறுகின்றது. எனினும் அசைக்க முடியவில்லை!

நாலிழையில் ஆடிக்கொண்டிருந்த மத்திய அரசுக்குத் தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் உதவி தேவை. எனவே அ. தி. மு. க. உறுப்பினரின் நெருக்குதலின் பேரில், உத்தரவை அமுல்படுத்த, அதனை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கும் முதல் நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என மத்திய அரசு அறிவித்தது.

விளைவு! கர்நாடகத்தில் கொந்தளிப்பு அங்கு காலம் காலமாக வசித்து வந்த தமிழர்கள்மீது வன்செயல்கள்!

மத்திய அரசு 'கப்சிப்'! காரணம் என்னவென்றால் அதன் காதிலே கர்நாடகம் வைத்துவிட்டது பூ!

தற்போது அ. தி. மு. க. அரசின் மெத்தனப் போக்கைச் சுட்டிக்காட்டி அரசியல் லாபம் தேட, தமிழக இந்திரா காங்கிரஸ் முனைந்தது.

அந்தவேளை - திடீரென உண்ணாவிரதம் ஆரம்பித்து, செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு வைத்துவிட்டார் காதிலே பூ.

அரசியல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டார் நரசிம்மராவ்; அதிகாரிகள் சுறுசுறுப்படைந்தனர்; நீர்வள அமைச்சர் இருமாநிலங்களுக்கும் சென்று பேசி, நிலைமையைச் சமாளித்தார். நீர் வழங்கவும், கண்காணிக்கச் சபை அமைக்கவும் உறுதிமொழிகள் தரப்பட்டன.

ஆனால் கர்நாடக அரசு மழை பெய்யட்டும் பார்ப்போம் எனக் காதிலே மீண்டும் பூ வைக்கப் பார்க்கிறது!

உண்ணாவிரதம் முடிந்ததும், மகிழ்ச்சி ஆரவாரம் கரை புரண்டதாம்! பாவம், பொது மக்கள், அவர்கள் காதிலே பூ?

# நல்லைக் கந்தனை வணங்கி நலங்கள் யாவும் பெறுவோம்

பண்டைத் தமிழ் மக்கள் சிவபெருமான், முருகன், கொற்றவை, திருமால் முதலிய தெய்வங்களுக்கு கோயில் அமைத்து சிறப்பாக திருவிழாக்கள் செய்துவந்தமையை பரிபாடல், பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, அகநானூறு, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை முதலிய பழம் தமிழ் இலக்கியங்களால் அறியக்கிடக்கிறது.

அக்காலத்தில் கோயில் வழிபாடு முக்கிய இடம் பெற்றமையை

''பிறவா யாக்கைப்
பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள்
அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி
வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன்
கோயிலும்''

எனச் சிலப்பதிகாரத்தில் வரும் பாடல்களால் உணரக் கூடியதாகவுள்ளது.

''பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்'' என்பது ஒப்பற்ற சிவபெருமானைக் குறிப்பதாகும். அத்தகைய எல்லையற்ற சிவபெருமானின் திருவருளால் தோன்றியவர் முருகப் பெருமான்.

முருகப்பெருமானுக்கு தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் பழமையும் பெருமையும் மிக்க கோயில்கள் பல உண்டு.

முருகப்பெருமானின் பெருமை, எல்லையற்ற சிறப்பு ஆகியவற்றை உலகோருக்கு எடுத்துக்காட்டுவனவாக விளங்குபவை திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம் மற்றும் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் ஆகியனவாகும்.

**அ. சி.**

இவையன்றி ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள் மற்றும் பல மெய்யன்பர்களாலும் புலவர்களாலும், சிற்றரசர்களாலும் முருகன் பெருமைபற்றி பாடப்பட்ட பிரபந்தங்கள் எண்ணிலடங்காதன.

ஈழத்திலும் முருகன் புகழ் பாடும் விருத்தங்களும் புகழ் பெற்ற தலங்களும் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். அவற்றுள் ஒன்றே நல்லூர் கந்தன் ஆலயமாகும்.

முருகன் அடியார்கள் கோவிலுக்குப் போகும்பொழுது உலக விவகாரங்களில் மனத்தைச் செலுத்தாமல் முருகப் பெருமானின் திருநாமங்களை உச்சரித்துக்கொண்டு பயபக்தியோடு செல்லுதல்வேண்டும்.

நாம் பூண்பதும், காண்பதும் நினைப்பதும் ஒன்றாயிருந்தால்தான் முருகப் பெருமானின் திருவருட் கடாட்சம் நமக்குக் கிடைக்கும்.

நல்லைக் கந்தனிடம் அடியார் நலனை வேண்டி இராமலிங்க அடிகளார் தமது பாடலில்

''ஒருமையுடன் நினது திரு
மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப்
புறம் ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது
புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாது
இருக்கவேண்டும்
பெருநெறி பிடித்து
ஒழுகவேண்டும்
மதமான பேய் பிடியா
திருக்கவேண்டும்''

ஏதுபிழை செய்தாலும் ஏழைமேற்கு இரங்கி தீங்குபுரியாத தெய்வம் முருகப் பெருமான் ஆகும்.

முருகன் நமக்கு வேண்டுவன யாவற்றையும் ஈகான்பாலவையும் அறியும் ஆற்றல் அவனுக்கு உண்டு.

சைவ அன்பர்கள் நல்லைக் கந்தனை வழிபட்டு அவன் அருள் பெற்று உய்வார்களாக!

## துயர் துணிக்கும்....

காக்கும் கொடிவேல்
நின்ன தன்றோ - நீ
கருணை ததும்பும்
இறைவ னன்றோ
| கந்தா

பார்க்கும்இடமெல்லாம்
உன் னுருவம்-தமிழ்ப்
பாவைக்கு நீயே
பொருள் வடிவம்
கூப்பித் தினந்தொழும்
அடியருக்கு -என்றும்
குறைநலை காக்கும்
மழலை முகம்
— காக்கும்

அவ்வைக்கு கனி
தந்த அன்புருவம்
ஆனை முகம் தம்பி
எனும் சொருபம்
எல்லோர்க்கும் அபயம்
அளிக்கும் முகம்
- எங்கள்
நல்லையில் அமர்ந்த
ஆறு முகம்
— காக்கும்

போக்கும் வினைகள்
உனைத் தொழுதால்
- இன்பம்
பொங்கும் சரவண
மந்திரம் தான்
தாயாய் தந்தை
என ஆகித் - துயர்
துணிக்கும் கொடிவேல்
நின்ன தன்றோ கந்தா
— காக்கும்

—நெடுந்தீவு லக்ஸ்மன்

## உற்சவகால சிகிச்சை

(பண்டத்தரிப்பு)

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூரில் இயங்கிவரும் இடம் பெயர்ந்தோருக்கான அரசினர் மத்திய மருந்துச்சாலை காலை ஏழு தொடக்கம் மாலை ஏழு மணிவரை செயற்படவுள்ளது.

உற்சவகால சிகிச்சைக்காக மேலதிக மருந்து வகைகள் சுகாதார திணைக்களத்தினால் இந்த மருந்துச்சாலைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. (72)

## மகாபாரதம் தொடர் விரிவுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபை வருடா வருடம் நடாத்திவரும் தெய்வீக அருள் இசைச் சொற்பொழிவு இன்று தொடக்கம் பூங்காவனத் திருவிழா வரை தினமும் மாலை 5 15 தொடக்கம் நடைபெறும்.

நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும் தொடர் இசைச் சொற்பொழிவில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா ''மகாபாரதம்'' பற்றி தொடர் விரிவுரை பக்கவாத்திய சகிதம் நிகழ்த்துவார்.

## தொண்டர் சேவை

(கொழும்புத்துறை)

நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் தொண்டர்சேவை வழமைபோல் இவ் வருடமும் செய்வதென யாழ். மாவட்ட இந்துஇளைஞர் பேரவை தீர்மானித்துள்ளது.

உற்சவகாலத் தொண்டர் சேவையில் பங்குபற்றித் தொண்டுபுரிய விரும்பும் சகல இந்து இளைஞர் மன்றம், பாடசாலைகள், இந்து இளைஞர் மன்றப் பிரதிநிதிகள் யாவரும் இன்று 24ம் திகதி சனிக்கிழமை காலை 6-00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் உள்ள பேரவைக் காரியாலயத்தில் தங்கள் பெயர் விபரங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு பேரவையின் நிர்வாகச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (154)

பாடசாலைகளில்

# முதலாம் வகுப்பு அனுமதி புதிய சுற்றுநிருபம்

(கொழும்பு)

பாடசாலைகளில் முதலாம் வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக புதிய சுற்றுநிருபம் வெளிவந்துள்ளது.

40 வீதமான அனுமதிகள் அப்பகுதியில் உள்ள பிரதான குடியிருப்பாளர்களின் பிள்ளைகளுக்கும், 20 சதவீதமான வெற்றிடங்கள் ஏற்கெனவே சம்பந்தப்பட்ட பாடசாலையில் கல்வி பயிலும் மாணவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கும், 20 சதவீதமான அனுமதிகள் பாடசாலையின் பழைய மாணவ மாணவிகளின் பிள்ளைகளுக்கும், 10 சதவீதமான அனுமதிகள் அப்பகுதியில் பிரதான குடியிருப்பாளராக இல்லாத பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் எஞ்சிய 10 சதவீத அனுமதிகள் இடமாற்றம் பெற்றுவரும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்குமாக ஒதுக்கப்படும் என்று அந்த சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடமையில் ஈடுபட்டு வரும் ஆயுதப்படை, பொலிஸ் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு விசேடமாக இடமளிக்கப்படும் என்றும் சுற்றுநிருபத்தில் கூறப்படுகிறது.

—ம-சி

## முதலுதவி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவத் தொண்டர் நிலையச் சிறுவர்கள் இன்று முதல் கடந்த வருடங்கள் போன்று நல்லூர் கந்தசாமி கோவிலில் தமது சேவையை ஆற்றவுள்ளனர். வழமைபோல இவர்கள் முதலுதவிச்சேவை உடைமைகள் பாதுகாப்பு, தடைமுகாம் சேவைகளையும் ஆற்றவுள்ளனர். (வி)

## இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினர் நல்லூர் ஸ்ரீமுருகன் தண்ணீர்ப்பந்தல் நிர்வாகத்தினரின் அனுசரணையுடன் வழங்கும் தெய்வீக இசை அரங்கு நாவலர் மணிமண்டப முன்றலில் இடம் பெறும்.

இன்றைய முதல் நாள் நிகழ்ச்சி: மாலை 6-00 மணிக்கு மங்கல இசை. கே. ஆர். சுந்தரமூர்த்தி - எஸ். செல்வரத்தினம் - நாதஸ்வரம், எஸ். இராமதாஸ் - என். கணேசு - தவில்.

## நானிலத்தில் இன்புறுவார் நலங்கள் பெற்றே

இல்லையினித் துயரென்று சேவல் கூவ
இவன்கொடியி லுறைசேவல் கோபுரத்தில் மேவ
வில்லேநிகர் புருவத்தாள் வள்ளியவள் கூட
விளங்குதெய்வ யானையும் வலமிடமாய் சேர
முல்லைமலர் நகையோடு முகமருளே வார
முருகனவன் வெள்ளிமயில் மீதமர்ந்தே யாட
நல்லைநகர் கந்தன்கொடி யேறிடவே காண்பார்
நானிலத்தி லின்புறுவார் நலங்கள் பெற்றே.

நாயன்மார்கட்டு இ. குகதாசன்

(இன்று நல்லூர் கந்தன் கொடியேற்ற உற்சவம்)

## இன்று

(யாழ்ப்பாணம்)

''முல்லைத் தீவுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சாளரம் இதழ் வெளியீடு பற்றிக் க சந்திரன் தலைமையில் நடத்தும் கலந்துரையாடல் இன்று 24ம்தேதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையில் நடைபெறும்.

0 0 0

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு காலையடி ஞானவேலாயுத சுவாமி கோவில்மண்டபத்தில் திரு.ச. அழகரத்தினம் எழுதிய 'கந்தர் அனுபூதி நுழைவாயில்' என்ற நூல் வெளியீட்டு விழா இன்று 24ம்திகதி சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. (72)

0 9 0

(மானிப்பாய்)

நாவலி வடக்கு நாச்சிமார் முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 24ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (71)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புறநிலைப்படிப்புகள் அலகு வழங்கும் உளவளத்துணை ஓர் அறிமுகக் கற்கை நெறி இன்று 24ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

நள்ளிரவில்

## 50 கலிவா தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அராலித்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் நள்ளிரவு 12-15 மணியளவில் தாவாந்துறையை அண்டியுள்ள கரையோரப் பகுதியை நோக்கி திடீரென பலத்த துப்பாக்கி வேட்டுக்களையும்- 50 கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

இதனால் மக்கள் பீதியடைந்த நிலையில் பாதுகாப்பு வலயத்தை நோக்கி ஓடினார்கள். (வி-சி)

# 10-ம் ஆண்டு நிறைவு



## மனித முழுமைக்கான போராட்டத்தின் ஓர் அம்சமே எமது போராட்டம்

ஈழத் தமிழ் மக்களது போராட்டமானது, உலக ரீதியில் மனிதன் மனிதனாக வாழ்வதற்கு நடாத்தும் போராட்டத்தின் ஓர் அம்சமே. தமிழ் ஈழவர் ஒரு சிறிய மக்கள் குழு ஆவர். ஏழையர். வெறுத்தொதுக்கப்பட்டோர் ஆவர். ஆதலின் அவர்கள் இறைவனின் மக்களாவர். இறைவனின் மக்களாவதற்கு மிகுந்த தகுதி உடையவராவர். வரலாற்றின் ஆக்கத்திலே "இறைவனின் ஏழையர்" தனிப்பங்கொன்றினை வகித்து வந்துள்ளனர். பெரும் பேரரசுகளின் சூழ்ச்சிகளுக்கெதிராய்ச் சிறிய மக்கட் குழுக்கள் நடாத்திய போராட்டம் இறைவனின் போராட்டமாய் இருந்துள்ளது. மனித வரலாற்றிலே இறைவன் பிரசன்னமாயிருப்பதை இஃது உறுதிப்படுத்துகிறது. இறைவன் வரலாற்றின் தலைவன் என்றால், சிறிய மக்களின் நம்பிக்கைகளுக்கு நியாயம் உண்டு. வெறும் ஒரு மானிடக் கூட்டமாவதற்காக அல்ல, ஒரு மக்களாவதற்கே அவர்கள் போராடுகின்றனர்.

அசாதாரண சிக்கலொன்றில் அகப்பட்டுள்ள மக்கள் நாம். கி. பி. 13-ம் நூற்றாண்டிலிருந்து தான் நாங்கள் ஒரு தேசிய இனமாக இருந்துள்ளோம். இத்தீவொன்றின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மட்டுமே பெரும்பாலும் நாங்கள் வாழ்கின்றோம். 400 ஆண்டு காலம் ஐரோப்பிய எசமானர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கீழிருந்தோம். இக்குடியேற்றவாதிகளை எதிர்த்து, எம் சிங்களச் சகோதரர்களோடு சேர்ந்து நாங்கள் போரிட்டோம். ஆனால் ஆங்கிலேயர் சென்ற பின்னர் எம் சிங்களச் சகோதரரின் அடிமையானோம். இவர்கள் மீது நாங்கள் வெறுப்புக்கொண்டிலோம். நாங்கள் கூறுவது இது தான். அந்நியர் இங்கு வருமுன்னே நாங்கள் ஒரு தனி மக்கட் குழுவாய் இருந்தோம். அவர்கள் தான் சென்றுவிட்டார்களே. இனி நாங்கள் இறைமையுள்ள ஒரு மக்கட் குழுவாய் வாழவே விழைகின்றோம். எங்கள் தலைவிதியை நாங்களே நிர்ணயிப்போம். எங்கள் நாட்டினிலே அமைதியையே நாடுகின்றோம். எங்கள் தாயகத்தை உழுது பயிரிட்டு, எங்கள் கடலோர அமைதியில் வலைவீசவே நாங்கள் விரும்புகின்றோம். தமிழர் பரம்பரையாக இந்துக்களாவர். எங்கள் நாட்டுத் தமிழர் பெரும்பான்மையினர் சைவர்களாவர். "கிறிஸ்தவர்களென்றும் காலனித்துவப் பேரினவாதத்தின் கையாட்கள், எம் பரம்பரை மதங்களுக்குத் துரோகமிழைத்தவர்கள், பச்சோந்திகள், சந்தர்ப்பவாதிகள்" என்ற எண்ணம் இவர்களிடம் உண்டு. இந்துமத இளைஞர்களோடு நான் சேர்ந்து இயங்கியபோது அவர்களின் இந்த எண்ணங்கள் படிப்படியாக மறைவதைக் கண்டேன். அவை முற்றாக மறைந்துவிட்டனவா தானறியேன். எங்களைப் பொறுத்தவரை தந்தை இறைவனின் மிகப்பெருங் கொடை கிறிஸ்துவே ஆவார். ஆனால் கிறிஸ்து ஓர் அருங்கொடை, அனைவர்க்கும் கொடுக்கப்படுபவர் அல்லர். நேர்மையும் பெருந்தன்மையும் நிறைந்த எத்தனையோ இறந்த இந்து இளைஞர்களை உள்ளனர். அவர்களில் சிலர் வாழ்வின் சுகங்களையும் பாதுகாப்புகளையும் கைவிட்டு விட்டனர்கள். அவர்கள் வேட்டையாடப்பட்டு, காடுகளில் ஒளிந்திருந்து பல்வேறு ஆபத்துக்களுக்கு முகங்கொடுப்பவர்கள். தங்கள் மக்களுக்காக அருந்தியாகங்களைச் செய்துள்ள இவர்களை, கிறிஸ்தவர்கள் என்று பெயர் பெறாத இந்தக் "கிறிஸ்தவர்களை" நாங்கள் மெச்சுகின்றோம். "தன் நண்பர்களுக்காக உயிரை கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை" என்றார் கிறிஸ்து. இப்படிப்பட்ட பகை நடுவிலேயே கிறிஸ்தவர்களான நாங்கள் சாட்சியாக அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்துவின் நற்செய்தியை வார்த்தையால் அறிவிக்கும் நேரமல்ல இது; செயல் வடிவம் வேண்டி நிற்கும் நேரமிது. முதலில் இந்த என் நண்பர்களோடு சிலுவையில் அறையப்பட நான் விரும்புகிறேன். அதுவே நான் அளிக்கக்கூடிய மிகச் சிறந்த சாட்சியம். அவர்களது அணியில் மௌனமாய் நானும் இணைகின்றேன்; என்னும் உறையும் கிறிஸ்துவின் ஆவி தரும் மகிழ்வையும் நம்பிக்கையும் கொண்டவனாய் இணைகின்றேன். அவர்கள் சோர்வுகளில் ஊக்கமூட்டி, அவர்கள் கவலையில் அவர்களைத் தேற்றி, அவர்கள் புண்படுகையில் குணமளிக்க, அவர்களோடு சேர்ந்து நானும் வீறு நடை பயில்கிறேன்.

அ. விமலதாசன்

(வி-352)

# தமிழர் பிரச்னையை தீர்க்க சிங்களவருக்கு அக்கறையில்லை

(கொழும்பு)

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாள் முதல் தமிழ் மக்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு சிங்கள அரசியல்வாதிகள் எந்தவித அக்கறையையும் எடுக்கவில்லை.

முன்னாள் தமிழ் எம். பி. ஒருவர் மேற்கண்டவாறு பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று சிங்கள அரசியல்வாதிகள் நேர்மையாக சிந்திக்கத் தவறிவிட்டனர்.

தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கடந்த காலத்தில் சந்தர்ப்பங்கள் இருந்தன.

அரசின் அணுகுமுறையுடன் அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்குச் சரியான நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம் ஆனால் இது வரை அந்த முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்று தான் கூறவேண்டும் என்றார். (இ)

## விசேட கருமபீடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மேற்தரக்கிளை கிளை ஒரு விசேட கருமபீடம் இன்று சனிக்கிழமை காலை 9-30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் திறக்கப்படும். இக்கருமபீடம் உற்சவ காலம் முடிவடையும் நாள் வரை திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### நல்லூர் ஆலய உற்சவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பின்வருமாறு:

யாழ். நகரில் இருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வீதியில் ஆனைப்பந்திச் சந்தி, கந்தர்மடம்சந்தியிலிருந்து கோவிலுக்குச் செல்லும் வீதியில் அரசடிச்சந்தி. ஆடியபாதம் வீதியில் இருந்து யாழ்நகர் நோக்கிச் செல்லும் வீதியில் சிவன்கோயில் சந்தி. பருத்தித்துறை வீதியில் இருந்து யாழ்நகருக்கு வரும் வீதி சங்கிலியன் சிலையுடனும் மேற்கூறிய வீதிகள் தடைசெய்யப்பட்டிருப்பதால் பின்வரும் வீதிகளில் போக்குவரத்துச் செய்யலாம். பருத்தித்துறை யாழ். வீதிக்குப் பதிலாக கச்சேரி நல்லூர் வீதி. கோவில் வீதி - யாழ். நகர் நோக்கி இதற்குப் பதிலாக, சிவன் வீதி சத்திரம்பலாவிவீதிக்கு யாழ். நகர் பருத்தித்துறை வீதியைப் பாவிப்பவர்கள் ஆனைப்பந்தி சந்தியில் இருந்து நாவலர் வீதிவழியாக சென்று கச்சேரி நல்லூர் வீதியால் செல்லலாம் என தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர். -நி

### இனப்பிரச்னைக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இனப்பிரச்னை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்திலேயே ஏற்பட்டது. இதுவரைக்கும் அதனைத் தீர்த்து வைப்பதற்கு இந்த அரசு எதுவித முயற்சியும் எடுக்கவில்லை எனவே இன்றைய இனப்பிரச்னைக்கான முழுப் பொறுப்பையும் இந்த அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இனப்பிரச்னை தீர்வுக்கான வழிவகைகளை ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது ஆனால் பிரச்னையைத் தீர்ப்பதற்கான ஆலோசனை எதனையும் அரசு இதுவரை முன்வைக்கவில்லை.

அரசாங்கம் முன்வந்து இதற்கு ஒரு தீர்வை முன்வைக்காவிட்டால் நாம் எப்படி எமது தீர்வுத்திட்டத்தை முன்வைப்பது? அரசு தான் எமக்கு வழிகாட்ட வேண்டும்.

இனப்பிரச்னை விடயத்தில் அரசு எந்த வழியிலாவது ஆலோசனைகளை முன்வைக்குமானால் அவைபற்றி கருத்துத் தெரிவிக்க எமது கட்சி தயாராகவே உள்ளது என்றார். -இ

### காணுதல்

(1ம பக்கத் தொடர்ச்சி)

நிற்கும் காட்சி பேசுகின் இன்னோர் அறிகுறி என்று செய்தியாளர் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தை நோக்கி காணமல் போனோரின் உறவினர்கள் படையெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வீ

### புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இத்தனை பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தும் இறுதியில் ஜனாதிபதி பிரதமரின் மட்டக்களப்பு விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்ரஸ் பெரேராவும், வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூரும் இந்த இடம்பெயர் சேவையில் முக்கியபிரமுகர்களாக கலந்து கொண்டனர்.

பாதுகாப்பு காரணங்களின் நிமித்தம் ஜனாதிபதியும், பிரதமரும் இடம்பெயர் சேவையில் கலந்துகொள்ளமுடியாமல் போனதாக அமைச்சர் மன்சூர் தெரிவித்தார்.

ஆனால் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அவசர தேசிய அலுவல்கள் இருந்த காரணத்தினால் அவர்களால் இந்த வைபவத்தில் கலந்துகொள்ள முடியாமல் போனதாக பெஸ்ரஸ் பெரேரா தெரிவித்தார். (இ)

### பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டர்கள் மூலம் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாகவே இந்தப் புதிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்குத்தேவையான இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்யவும், அவற்றை கம்பியூட்டர் மயப்படுத்தவும் பெருந்தொகைப் பணம் செலவாகும் என தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அடையாள அட்டைகள் விநியோகிக்கும் திட்டமானது மிகவும் விரிவான ஒரு திட்டம் என ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் அரவிய சமரவீர தெரிவித்துள்ளார். (இ-வீ)

### 10 ஆண்டு கால

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காலப்பகுதியில் 250 க்கு ஒருவர் என்ற வீதத்தில் தமிழர்கள் அரச படைகளினால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

குழந்தைகள், பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள் உட்பட வயோதிபர்களும் இந்த எழுபதினாயிரம் பேரில் அடங்குவார்கள். (ரி)

### வெள்ளவத்தையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் பஜனைப் பாடல்களைப்பாடியபடி சென்றனர். (இ

## நள்ளிரவு ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் பண்ணைப் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்களையும், 50 கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இதனால் நித்திரையில் இருந்த இப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினார்கள். (வீ)

### ராணுவம் சீற்றம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீது வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. பீரங்கி பொருத்தப்பட்ட கப்பல்கள் அருகிலுள்ள மண்டு வாவியில் உஷார் பணியில் ஈடுபட்டுள்ளன. (வீ)

### படகு மூழ்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பயணம் செய்த நால்வரில் மூவர் கடலில் பாய்ந்து நீந்தி கிளாலிக் கரையை அடைந்துள்ளனர்.

இவர்களுடன் சென்ற திருகோணமலையைச் சேர்ந்தவரும் தற்பொழுது பண்டிதர் குடியிருப்பு கெற்பலியில் வசிப்பவருமான பாலசிங்கம் சதீஸ்வரன் (வயது 23 என்பவருக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவரவில்லை. (162-நி)

### ஜனாதிபதி இல்லாது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றே கூறவேண்டும் என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த மூன்று நாள் நிகழ்ச்சியில் அரச அமைச்சர்கள் செய்தியாளர்கள் புடைசூழ தமிழ் மக்களைச் சந்தித்து அவர்களின்பிரச்னைகளைகேட்டு உதவுவதாக திட்டமிடப்பட்டிருந்தது.

கிழக்கில் நிலைமை பழைய நிலைக்குத் திரும்புகிறது என்ற இராணுவத்தின் கூற்று உண்மையாக இருக்கலாம். ஆனால் பேசுக மிக மோசமானதைக் கண்ட அனுபவித்த இந்தப்பகுதியில் எல்லாம் சுமுகமாக இல்லை என்பதையே ஜனாதிபதியின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது. (வீ)

### ஜனாதிபதியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா இராணுவம் பகீரத முயற்சிகள் மேற்கொண்டது. ஆனால் இன்று அவை தவிடு பொடியாகிவிட்டன.

கிழக்கில் மூன்றுமாத காலத்திற்கு தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு வழிமேற்படுத்திக் கொடுப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு படை அதிகாரிகள் கூறுகிறார்கள் ஆனால் ஜனாதிபதியின் விஜயம் இரத்துச் செய்யப்பட்டது. கிழக்கின் நிலைமையில் எதுவித முன்னேற்றமும் இல்லை எனவும் அங்கு தொடர்ந்தும் பாதுகாப்பற்ற நிலைமை நிலவி வருவதையும் எடுத்துக்காட்டுகின்றது என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (இ-வீ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post ffice, Sri Lanka under Licence Number B/10336/B